புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

====================================================================

# புறநானூற்றில் நம்பிக்கைகளும் வீரவழிபாடுகளும்

டெ.ஜெனிஷா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவுஎண் : 2111314022039,
தமிழ்த்துறை, நேசணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம் -629165

முனைவர்.யோ.நே ஆட்லின் பியூலா
நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி - 627012

====================================================================

ஆய்வுச் சுருக்கம்:

சங்க இலக்கிய எட்டுத்தொகை புறம் சார்ந்த நூல்களில் ஒன்றான புறநானூற்றில் நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன . மனித வாழ்வின் படிநிலை மற்றும் பிரதிபலிப்பானது இயற்கையின் மீதான நம்பிக்கை, கடவுள் வழிபாடுகள் அனைத்தும் இயற்கையோடு ஒன்றியதாகவே காணப்பட்டது. நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளையும் மக்கள் எங்ஙனம் பின்பற்றினார்கள் என்பதையும் நம்பிக்கையினால் நடைமுறை வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும் சங்கப் புறநானூற்றுப் பாடல்களின் வாயிலாக ஆராயப்படுகின்றன.

பறவைகளைச் சகுணமாக பார்த்தல், நல்லநாள் பார்த்தல், நற்சொல் கேட்டல், தீயசகுணங்கள், கனவில் தீய மற்றும் நற்பலன்களைக் காணுதல், இயற்கையின் மாறுதல்களை சகுணமாக எண்ணுதல், மற்றும் சங்ககால மக்களின் பொதுவான சில நம்பிக்கைகளும் இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும், தமிழர்களின் வழிபாட்டு முறைகளான நடுகல் வழிபாடு, தெய்வ வழிபாடுகள், இயற்கையை தெய்வமாக எண்ணி வழிபடுதல் போன்ற வழிபாட்டு முறைகள் சங்ககால மக்களால் எவ்வாறு கடைபிடிக்கப்பட்டன என்பதனைக் குறுந்தலைப்புகள் வாயிலாக இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகிறது.

## முன்னுரை:

சங்ககால மக்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு எவ்வாறாக வாழ்ந்தார்கள் என்பதை சித்தரிப்பது இலக்கியங்கள். ஆகும் சங்ககாலத் தமிழர்கள் அன்றாட வாழ்வில் ஏராளமான நம்பிக்கைகளையும் வழிபாடுகளையும் பின்பற்றி வந்துள்ளனர்.

மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பு நம்பிக்கையிலிருந்து உருவாகின்றது. நம்பிக்கையானது மக்களால் உருவாக்கப்பட்டு கடைபிடிக்கப்படுகிறது.. நம்பிக்கை எப்போது தோன்றியது என்று குறிப்பிட்டுக் கூற இயலாது. மக்கள் தங்கள் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்றாற்போல் நம்பிக்கை மற்றும் வழிபாடுகளை முறைப்படுத்தி அமைத்துக் கொண்டனர். சங்ககால மக்கள் எந்த ஒரு செயலைச் செய்வதற்கு முன்பும், குறிப்பாக போருக்குச் செல்வதற்கு முன்பு குறி கேட்பது, சகுணம் பார்ப்பது போன்ற நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். இந்நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் காலம் காலமாக இன்று வரை தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன.

## நம்பிக்கைகள்:

மனிதனுடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் நம்பிக்கைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. நம்பிக்கைகள் ஒரு சமுதாயத்தைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கு உதவும் அச்சாணியாகச் செயல்படுகின்றன. வரலாற்றுக்கு முன் வாழ்ந்த மக்களின்

நம்பிக்கைகளைக் குகைகளில் வரையப்பட்ட ஓவியங்கள் மற்றும் கல்வெட்டுகள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது. நம்பிக்கைகள் மனிதர்கள் தங்களுக்காக உருவாக்கிக் கொண்டவையாகும். மேலும் அவை நம் முன்னோர்களின் வழி பரம்பரை பரம்பரையாக வந்தவைகளாக இருக்கும்.

சங்க கால மக்கள் பின்பற்றி வந்த நம்பிக்கைகளில் முக்கியமாக நல்ல நாள் பார்த்தல், சகுணம் பார்த்தல் ஆகியன இன்றளவும் நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகின்றன.

பொதுவான சில நம்பிக்கைகள்:

சங்க கால மக்களால் பின்பற்றப்பட்டு வந்த நம்பிக்கைகளில் சில பொதுவான நம்பிக்கைகளாக தற்காலம் வரை பின்பற்றப்படுகின்றது. அவைகளுள் சில,

- கடுகின் புகைக்கு தீயன விலகி செல்லும் என்பது நம்பிக்கை [புறம் 98:15]
- புண்பட்டவர்களை பேய்கள் அணுகாதவாறு வீட்டின் முன்பு வேப்பிலைகளை ஆங்காங்கே சொருகி வைப்பதும் கடுகினைப் புகைப்பதும் நம்பிக்கை [புறம் 288]
- மக்கள் புகழுடையவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதவர்களுக்கு மேலுலகம் இல்லை என்பது நம்பிக்கை. [புறம் 27]
- கைம்மையுற்றோர் கூந்தல் கொய்து வளையல் நீக்க வேண்டும் என்பது பழமையான நம்பிக்கை [புறம் 250]
- உன்னம் பார்த்தல், உன்னம் என்பது ஒரவகை மரம். அவ்வாறாக உன்னம் மரம் தழிர்த்து செழித்து காணப்பட்டால் செய்யும் செயல் வெற்றி பெறும் என்பது நம்பிக்கை. [புறம் 3]
- விண்மீன் எரிந்து கீழே விழுவதைக் கண்டால் தீயவை நிகழும் என்பது நம்பிக்கை. [புறம் 229]
- பண்டைய கால தமிழரிடையே கூகை அலறினால் சாவு வரும் என்று நம்பிக்கை இருந்துள்ளது. [புறம் 280, 240]
- சுப காரியங்கள் நடக்கும் வேளையில் விளக்கு அடைந்தால் நல்ல சகுணம் அல்ல என்ற நம்பிக்கை இருந்தது. [புறம் 280]
- போரில் பெரும்புண் ஏற்பட்டு வீழ்ந்து கிடக்கும் வீரனின் வீட்டில் தீயவை அணுகாதவாறு வாசனைப் பொருட்களை தெளித்தால் தீயன விலகும் என்ற நம்பிக்கை இருந்தது. [புறம் 280]

பறவைகள் பற்றிய நம்பிக்கைகள்:

சங்க கால மக்களிடையே காணப்பட்ட நம்பிக்கைகளுள் ஒன்று பறவைகள் பற்றிய நம்பிக்கைகளாகும். நல்ல செயல்களைச் செய்வதற்கு முன்பும், தொழில், போர் போன்றவற்றிற்குச் செல்வதற்கு முன்பும் பறவைகளைச் சகுணமாகப் பார்த்துச் செல்வது வழக்கம். சகுணம் பார்த்துச் சென்றால் வெற்றிக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. கூகை அலறினால் சாவு வரும் என்ற நம்பிக்கை இருந்துள்ளது என்பதனை பின்வரும் பாடல் விளக்குகிறது.

"அஞ்சுவரி குராஅல் குரலுந் தூற்றும்" [புறம் 280]

இப்புறநானூற்று வரிகளில் கூகையின் குரலினைக் கேட்டு தலைவி போருக்குச் சென்ற தலைவன் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று எண்ணி அச்சப்பட்டு குறி கேட்கச் செல்வதாக அமைகின்றது.

பறவைகள் எழுப்பும் ஓசையினையும் பறவைகள் செல்லும் திசையினையும் வைத்தும் தீயக் குறிகளை கண்டறிந்தனர். இதனை,

"நாள் அன்று போகி, புள் இடை தட்ப" [புறம் 124]

என்ற புறநானூற்று பாடல் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

புறநானூறு 296-வது பாடல் நல்ல நாள் பார்த்து அரசன் போருக்கு செல்வார் மற்றும் வீரர்கள் போருக்கு செல்லும் முன்பு சில பறவைகளைச் சகுணமாகப் பார்த்து செல்வதையும் நம்பிக்கையாகக் கொண்டிருந்தனர் என்ற செய்தியை வெளிப்படுத்துகிறது.

*சகுணம் பார்த்தலும் நற்சொல் கேட்டலும்:*

*போருக்குச் செல்லும் முன்பு சகுணம் பார்த்தல் மற்றும் நற்சொல் கேட்டல் சங்க கால மக்களின் நம்பிக்கையாயிருந்தது. பின்பு நடக்கப் போகின்ற நன்மை அல்லது தீயச் செய்திகளை முன்கூட்டியே சில குறிப்புகள் மூலமாக உணர்ந்து கொள்வதற்காக நற்சொல் கேட்பது வழக்கத்திலிருந்தது என்பதனை தொல்காப்பியம் புறத்திணையில் பின்வருமாறு கூறுகிறது.*

*"படை இயங்கு அரவம், பாக்கத்து விரிச்சி*
*புடை கெடப் போகிய செலவே புடைகெட*
*ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்" [தொல்.புறத் 61]*

*போருக்கு படைகள் புறப்படும் முன்பு ஆரவாரம் செய்தலும் போரில் வெற்றி பெறுவதற்காக நற்சொல் கேட்டலும், சகுணம் பார்த்தலும் பழங்கால மக்களுடைய நடைமுறையிலிருந்ததைத் தொல்காப்பியர் வழி அறியலாம். இதே செய்தியினை*

*"புள்ளும் ஓராம் விரிச்சியும் நி " [ குறுந் 218 ]*

*என்ற குறுந்தொகை பாடலும் குறிப்பிடுகிறது.*

*"நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்" [புறம் 280]*

*என்ற பாடல் போருக்குச் சென்ற தலைவனுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று எண்ணி அஞ்சிய தலைவி ஊரிலுள்ள முதுமகளிடம் சென்று கூற அவர்கள் நெல்மணிகளைத் தூவி நற்சொல் கேட்கும் பழக்கமும் இருந்துள்ளதை அறிய முடிகிறது.*

*கோள்கள் பற்றிய நம்பிக்கை:*

*வெள்ளிகோளானது தென்தசையில் தோன்றுவது தீய நிமித்தமாக பார்க்கப்படுகிறது. இவ்வாறு வெள்ளிக்கோள் தென்திசையில் எழுவதால் மழை பெய்யாமல் பூமி வறண்டு பயிர்நிலம் செழிக்காமல் பஞ்சம் உண்டாகும் என்பது தொன்றுதொட்டு பரவிவரும் நம்பிக்கையாகும். அதேபோல் வெள்ளிக் கோளானது தனது நிலையிலிருந்து மாறினால் நாட்டின் வளம் குறையும் என்பதும் பழங்கால நம்பிக்கையே ஆகும். இதனைப் பின்வரும் புறநானூற்று பாடலால் அறியலாம்.*

*"வெள்ளி தென்புலத்து உறைய, விளைவயல்" [புறம் 388]*

*"தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்" [புறம் 117]*

*பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர்கள் இயற்கையின் ஒவ்வொரு அசைவுகளுக்கும் ஏற்றாற்போல் காலநிலைகளை உணர்ந்து அதனால் ஏற்படும் வளங்கள் மற்றும் அழிவுகள் போன்றவற்றைக் கணக்கிட்டு அதற்கேற்றார்போல் தங்களுடைய வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொண்டனர்.*

*கனவு பற்றிய நம்பிக்கை:*

*சங்க காலம் முதல் நவீன காலம் வரை மக்களிடையே கனவு பற்றிய நம்பிக்கை இருந்து வந்துள்ளது. பெரிய மரத்தின் கிளைகள் உலர்ந்து போகுதல், அச்சத்தை உண்டாக்கும் பறவைகளின் ஓசை, பல் பூமியில் விழுவதைப் போலவும், படை கருவிகளுடன் செல்வது, கட்டிலோடு கவிழ்தல் போன்ற செயல்களைக் கனவில் கண்டால் அவை அனைத்தும் தீமையான செயல்கள் நடப்பதற்கான அறிகுறிகளாகவும் இதனால் தீயவை நடக்கும் என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியில் காணப்பட்டது. இதனை*

*"வெள்ளி நோன்படை கட்டிலொடு விழவும்*
*கனவின் அரியன காணா" [புறம் 41]*

*என்ற புறநானூற்று பாடலடிகளால் புரிந்து கொள்ளமுடிகிறது. மனித சிந்தனைகளின் தெளிவுகளே கனவாக வெளிப்படுகின்றது. அவை நல்லனவாகவோ அல்லது தீயவைகளாகவோ அல்லது அச்சுறுத்தக் கூடியவனாகவோ அமையலாம். அவ்வாறாக ஏற்படும் கனவுகளின் பொருளுக்கு ஏற்றவாறு நம்பிக்கைகளையும் தன் வாழ்க்கைச் சூழலுகு ஏற்றாற்போல் மக்கள் நம்பிக்கைகளாக வகுத்துக் கொண்டனர்.*

*வீர வழிபாடுகள்:*

மனிதனின் மன உணர்வின் காரணமாகவே வழிபாடுகள் தோன்றின. வீரத்தின் அடையாளத்தை நிலை நிறுத்தவும் வழிபாடுகள் நடத்தப்பட்டன. இயற்கையோடு ஒன்றிய வாழ்வில் இயற்கையோடுள்ள மாறுபாடுகளும் வழிகாட்டுதல்களும் மனித வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. தனது வீரத்தினை போரில் நிலைநிறுத்தி தன்னுடைய நாட்டிற்காக தனது உயிரினையே தியாகம் செய்யும் வீரர்களுக்காக செய்யப்படும் வழிபாடுகள் வீரத்தை நினைவு கூறுவதாக அமைகின்றது. குடும்பத்திலிருந்து இறந்துட்ட முன்னோர்களின் நினைவாக அவர்களுக்கு வழிபாடுகள் செய்து தெய்வமாக வழிபட்டனர். அவர்கள் இறந்த நாளில் அவர்களை நினைவு கூர்ந்து அவர்களின் பெருமைகளையும் வீரத்தினையும் கூறி வழிபடுவதும் வழக்கம். போரில் நாட்டிற்காக இறந்துவிட்ட வீரர்களின் வீரத்தினை நிலைநாட்டுவதற்காக வழிபாடுகள் நடத்தப்பட்டன.

நடுகல் வழிபாடு:

போரில் வீர மரணம் அடைவோருக்கு நடுகல் அமைத்து விழா எடுப்பது பழைய மரபுகளில் ஒன்றாகும். நடுகல்லானது தெய்வத்திற்கு சமமாக கருதப்பட்டது. நடுகல்லினை நாள்தோறும் வழிபட்டால் தங்களுக்கும் வீர உணர்வும் வளரும் என பண்டையகால மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனை,

இல்லாகியரோ காலை மாலை
அல்லாக்கியர் யான் வாழும் நாளே
நடுகல் பீலி சூட்டி [புறம் 232]

என்ற பாடலில் அதியமான் கூறும் போது போரில் இறந்த அவ்வீரனின் நினைவாக நடுகல்லிற்கு மயிற்பீலி சூட்டி பலிபொருள் படைத்து வழிபடும் பழக்கம் இருந்தது. அவ்வாறு செய்வது பண்டைய தமிழரின் வீர மரபாகும்.

மேலும்,

“ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து விழுந்ததென
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே” [புறம் 335]

என்ற புறநானூற்றுப் பாடலில் பகைவர்களின் யானைகளைக் கொன்று இறந்துபட்ட வீரனுக்கு நடுகல் செய்து வழிபடும் வழக்கம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

“நல்வழி கொடுத்த நாணுடை மறவர்
சொல்ல இலிசை பெயரொடு நட்ட
கல் ஏசு கவலை எண்ணு மிக பலவே” [இரா.மோகன் பத்துப்பாட்டு. ப.378]

என்ற பத்துப்பாட்டு பாடலில் வீரமரணம் அடைந்த வீரனின் பெயரும் பெருமையும் கல்லில் எழுதி அக்கல்லினை தூய்மை செய்து சரியான இடம் பார்த்து நடுகல்லினை நட்டு அச்சிறப்புமிக்க கல்லிற்கு கோயிலெடுத்து படையலிட்டு அக்கல்லினை தெய்வமாக வாழ்த்தி வழிபட்டனர் என்ற செய்தியும் இடம் பெற்றுள்ளது.

நடுகல்லினை நாள்தோறும் வழிபட்டால் தங்களுக்கும் வீர உணர்வு உண்டாகும் என்பது சங்ககால மக்களின் நம்பிக்கை. மேற்கூறிய பாடலின் வாயிலாக நடுகல் வழிபாட்டு முறையானது தொன்றுதொட்டு வருவதனை அறிய முடிகின்றது.

தெய்வ வழிபாடு:

சங்ககால மக்களின் வழிபாட்டு முறைகளில் தெய்வ வழிபாடும் ஒன்று. மக்கள் பல்வேறு தெய்வங்களை வழிபட்ட செய்திகளைப் புறநானூறு குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றது. மக்கள் ஒவ்வொரு திணைக்கும் தனித்தனி தெய்வங்களை வழிபட்டனர்.

குறிஞ்சி நில மக்கள் முருகனையும், முல்லை நில மக்கள் திருமாலையும், மருதநில மக்கள் இந்திரனையும், நெய்தல் நில மக்கள் வருணனையும், பாலை நில மக்கள் கொற்றவையும் வழிபட்டனர். சங்ககால மக்கள் கோயில்களிலும், மரங்களிலும் கற்தூண்களிலும் வழிபாடுகள் செய்துள்ளனர் என்பதை இலக்கியங்களில் காணமுடிகின்றது.

“பால் புரை பிரை நுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல” [புறம் 91]

*பிறையை அணிந்த நீலநிறமேனியுடைய சிவபெருமானை வழிபாடு செய்துள்ளமையை மேற்கண்ட புறநானூற்று பாடல் வழி அறிய முடிகின்றது. பெருந்தெய்வ வழிபாட்டு முறை, சிறுதெய்வ வழிபாட்டு முறை மக்களிடையே காணப்பட்டதையும், இறந்த முன்னோர்களை வழிபடும் பழக்கமும் பழங்காலத்தில் நிலவியதையும் சங்க பாடல்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.*

தொகுப்புரை:

*மனிதனின் வாழ்க்கை முறை எவ்வளவு நவீனமாக மாறினாலும் மூடநம்பிக்கைகளே மேலோங்கியுள்ளது. நம்பிக்கைகள் மனித இனம் தோன்றியதிலிருந்து இன்று வரை மனிதனின் வாழ்வியலோடு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மனித வாழ்வின் பிரதிபலிப்பாக நம்பிக்கைகள் காணப்படுகின்றன. அன்றாட மனிதனின் வாழ்வில் மூடநம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டு முறைகளும் அதிகமாகக் குவிந்து காணக்கிடக்கின்றன. வழிபாட்டு முறைகளில் தெய்வங்கள் மக்களின் வாழ்க்கைச் சூழலோடும் இணைந்து காணப்படுகின்றது.*

*துணைநூற்பட்டியல்:*


*1.முனை.கு.வெ.பாலசுப்பிரமணியன்* — *சங்க இலக்கியம் புறநானூறு*
*முதல் பதிப்பு ஏப்ரல் 2004*
*நியூ செஞ்சரி புக் ஹவுஸ்(பி) லிட்*
*41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர் – சென்னை 600098*

*2.புலியூர்தேசிகன்* — *தொல்காப்பியம்*
*ஸ்ரீ செண்பகா பதிப்பகம்*
*பாண்டி பஜார்*
*சென்னை -17*
*பதிப்பு – ஜூன் 2010*

*3.மோகன் இரா* — *பத்துப்பாட்டு*
*நியூ செஞ்சரி புக் ஹவுஸ்(பி) லிட்*
*அம்பத்தூர் – சென்னை 600098*
*பதிப்பு - 2004*

*4. சா. வே. சுப்பிரமணியன்* — *சங்க இலக்கியம்*
*எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும்*
*[குறுந்தொகை] தொகுதி 1*
*மணிவாசகர் பதிப்பகம் 31 சிங்கார் தெரு,*
*பாரி நிலையம் சென்னை-1*
*முதற் பதிப்பு 2010*


********* ********* ********** ********* ********* ********** ********** **********